உ
பாலு சரவண சர்மா
*பழைய தாம்பரம் கிராம புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com

# கார்த்திகை தீபம் ஓர் விளக்கம் 2011

## கார்த்திகை தீபம்

| | |
|---|---|
| **பரணி தீபம்:** | புதன் 7.12.2011(மாலையில் சந்திர உதயத்தில் பரணி நட்சத்திரம் உள்ளது |
| **அண்ணாமலை தீபம்:** | வியாழன் 8.12.2011 |
| **வைகானாஸ தீபம்:** | சனி 10.12.2011 |
| **பாஞ்சரத்திர தீபம் :** | சனி 10.12.2011 |
| **ஸர்வாலய தீபம் :** | சனி 10.12.2011 |

**இல்லங்களில்:** சனி 10.12.2011 அன்று சந்திர கிரஹணம் மாலை 6:13 முதல் இரவு 9:17 வரை உள்ளது எனவே மாலை 6:13 முன்னர் தீபம் ஏற்றி வழிபடவும்(சூரிய அஸ்தமனத்திற்கு முன்னர் நிகழும் சந்திரகிரஹணம் அனுஷ்டானத்தில் இல்லை).

## கார்த்திகை தீபமும் சந்திர கிரஹணமும்

கார்த்திகை நட்சத்திரத்தின் அருகில் முழுநிலவு இருக்கும் மாதமே கார்த்திகை மாதம். இது போலவே முழுநிலவு எந்த நட்சத்திரத்தின் அருகில் உள்ளதோ அந்த நட்சத்திரத்தின் பெயரால் அந்த மாதம் அழைக்கப்படுகிறது.

இந்த ஆண்டு கார்த்திகை நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் சேராமல் வந்துள்ளதால் கோவில்களில் அவர்கள் சம்பிரதாயப்படி கார்த்திகை நட்சத்திரம் அல்லது பௌர்ணமி அடிப்படையில் தீபம் ஏற்றுகிறார்கள்

குறிப்பாக கார்த்திகை தீபம் என்ற உடன் நினைவுக்கு வரும் திருவண்ணாமலையில் இந்த ஆண்டு சனி 10.12.2011 அன்று பௌர்ணமி திதியில் சந்திர கிரகண தோஷம் இருப்பதால் சந்திரோதயத்தில் கார்த்திகை நட்சத்திரம் இருக்கும் வியாழன் 8.12.2011 அன்று தீபம் ஏற்றி வழிபடுகிறார்கள்

www.prohithar.com

## திதி, நட்சத்திரம் துவக்கம் முடிவு (சென்னை)

| திதி, நட்சத்திரம் | திருக்கணிதப்படி | வாக்கியப்படி |
|---|---|---|
| பரணி | 7.12.2011 புதன் காலை 10:57 மணி முதல்<br>8.12.2011 வியாழன் பகல் 1:48 மணி வரை | 7.12.2011 புதன் பகல் 12:58 மணி முதல்<br>8.12.2011 வியாழன் மாலை 3:24 மணி வரை |
| கார்திகை | 8.12.2011 வியாழன் பகல் 1:48 மணி முதல்<br>9.12.2011 வெள்ளி மாலை 4:20 மணி வரை | 8.12.2011 வியாழன் மாலை 3:24 மணி முதல்<br>9.12.2011 வெள்ளி மாலை 5:40 மணி வரை |
| பௌர்ணமி | 9.12.2011 வெள்ளி இரவு 6:27 மணி முதல்<br>10.12.2011 சனி இரவு 8:05 மணி வரை | 9.12.2011 வெள்ளி இரவு 7:24 மணி முதல்<br>10.12.2011 சனி இரவு 8:44 மணி வரை |

| தேதி | சந்திர உதயம் |
|---|---|
| 8.12.2011 | 15:58 |
| 9.12.2011 | 16:45 |
| 10.12.2011 | 17:35 |

9.12.2011 வெள்ளி அன்று திருக்கணிதப்படி பகல் 12 மணிமுதல் இரவு 12 மணி வரை நட்சத்திரம், திதி




Lunar Eclipses




## சந்திர கிரகணம் 10.12.2011 சனிக்கிழமை

| கிரகண நிலை Total Lunar Eclipse Time | | நேரம் IST |
|---|---|---|
| புறநிழல் கிரகண துவக்கம் | Moon Enters Penumbra | 17:02 |
| கிரகண துவக்கம் | Beginning of the Eclipse | 18:15 |
| முழு கிரகண துவக்கம் | Beginning of the Totality | 19:36 |
| உச்சம் | Middle of the Eclipse | 20:02 |
| முழு கிரகண முடிவு | Ending of the Totality | 20:28 |
| கிரகண முடிவு | Ending of the Eclipse | 21:48 |
| புறநிழல் கிரகண முடிவு | Moon leaves Penumbra | 23:02 |

# கார்திகை தீப விதிமுறைகள்

### சிவாலயங்களில் என்று கார்திகை தீபம் ?



சிவாலயங்களில் வழிபாட்டு முறையில் பல ஆகமங்கள் கடைபிடித்தாலும் பொதுவாக இரண்டு முறைகளில் கார்தீகைதீபம் ஏற்றப்படுகிறது ஆயினும் இவ்வாண்டு **கிரகண தோஷத்தால் சம்பிரதாயங்களுக்கு மாறுதலாக செய்யவேண்டியுள்ளது**

#### கடலும் - மலையும்

கடற்கரையும் அதை ஒட்டிய சிவாலயங்கள், மலை ஒட்டிய சிவாலயங்களில் பௌர்னமி திதி அன்று ஏற்றப்படும்.
உதாரணம்: திருமயிலை, திருவண்ணாமலை

#### கடலும் - மலையும் சாராத பகுதிகள்

இங்குள்ள சிவாலயங்களில் கார்திகை நட்சத்திரம் சந்திர உதயத்தில் இருக்கும் நாளே கார்தீகை தீபம் ஏற்றப்படுகிறது. உதாரணம்: தஞ்சை மாவட்ட கோவில்கள்.

### வைணவ கோவில்களில் கார்தீகை தீபம் என்று ?



geetasaar.com

வைணவ கோவில்களில் பாஞ்சாரத்திரம், வைகானாஸம் என இரண்டு ஆகமங்கள் கடைபிடிக்கப்பட்டு அதன் விதிப்படி கார்தீகை தீபம் ஏற்றப்படுகிறது

#### வைகானஸ விதி:

பௌர்னமி என்று சந்திரோதயத்தில் அதிகமாக வியாபித்துள்ளதோ அன்று கார்தீகை தீபம் ஆகும்.

#### பாஞ்சாரத்திர விதி

கார்தீகை நட்சத்திரமே பிரதானம், பரணி தொடர்பு இல்லாத கார்திகை நட்சத்திரம் உள்ள நாளில் கார்தீகை தீபம் ஏற்றவேண்டும். பரணி கார்தீகையும் சேர்ந்து இருப்பின் மறுநாள் கார்தீகை தீபம் கோண்டாட வேண்டும்

தீபம் ஏற்றும் பொழுது கார்தீகை நட்சத்திரம் இல்லை என்றாலும் பரவாயில்லை பரணியின் தொடர்பு(வேதை) கண்டிப்பாக இருக்கக்கூடாது என்பது விதி

#### பரணி தீபம்:

பரணி நட்சத்திரம் தீபாரோஹண காலத்தில் இருக்கும் அன்று பரணிதீபம்
<u>இவ்வாண்டு பல இடங்களில் பரணிதீபமும் கார்திகை தீபம் ஒரே தினத்தில் ஏற்றப்படும்</u>

### இல்லத்தில் கார்தீகை தீபம்:

இல்லத்தில் பௌர்ணமி மாலையில் சந்திர உதயகாலத்தில் இருக்கும் தினமே கார்திகை தீபம் ஏற்ற மிகவும் உகந்த நாளாகும்

### தீபம் ஏற்றும் முறை

வீட்டில் ஐந்து அகல் தீபங்களை வீட்டின் மையத்தில் ஏற்றி அவல், நெல்பொரி, வெல்ல அடை, உப்பு அடை, வெண்ணெய் ஆகியவற்றை படைத்து, மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவனை வணங்கி வழிபட்டு பின்னர் வீட்டில் தலைவாசல், வெளிவாயில் மற்ற இடங்களில் தீபம் ஏற்ற வேண்டும்

### தீப காயத்ரி மந்திரம்

ஓம் மங்கள ரூபாயைச வித்மஹே மாத்ரு தேவ்யைச தீமஹி - தந்நோ தீபஜோதி: ப்ரசோதயாத்

### திசை:

தீபத்தை கிழக்கு அல்லது வடக்கு முகமாக வைத்து ஏற்ற வேண்டும்.
பஞ்சுத்திரி, நல்லெண்ணெய், களிமண்ணால் செய்யப்பட்ட அகல் கொண்டு ஏற்றவும்
மண் அகல் வாங்கி ஏழை குயவனின் ஒரு நாள் உணவிற்கு வழிசெய்யுங்கள்.

### தானம்:

நாம் எந்த அளவு எண்ணையை விளக்கேற்ற பயன் படுத்துகிறோமோ அந்த அளவு தானம் செய்யவேண்டும்.
தமிழக கிராமங்களில் எத்தனையோ கோவில்களில் விளக்கு ஏற்ற இயலாத நிலையில் உள்ளது. அந்த கோவில்களுக்கு ஒருமாத மின்சார கட்டனத்தை செலுத்துவதால் இறைவனின் இருள்நீங்கினால் நமக்கு அருள் கிடைக்கும்.

---

பாழடைந்த கோவிலுக்கு சென்று தீபம் ஏற்றி கார்தீகைதீபத்தை கொண்டாடுங்கள். இறைத்தொண்டு என வாழும் கிராமத்து கோவில் ஏழை அர்ச்சகருக்கு, பூசாரிகளுக்கு வாழ உதவுங்கள். மன்னர்கள் போல் நம்மால் கட்டமுடியாது குறைந்த பட்சம் கோவிலை காப்பற்றும் அந்த ஏழை பூசாரிகளுக்கு வாழ்வளியுங்கள். இதுவும் இறைவழிபாடுதான் .

---

பாலு சரவண சர்மா
*பழைய தாம்பரம் கிராம புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு
தொலைபேசி: +91 44 22261742, +91 98403 69677
மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com

© காப்புரிமை 26.11.2011

www.prohithar.com